


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.07.2024) தலைமைச் செயலகத்தில், குழந்தை கடத்தல் தடுப்பு மற்றும் போதை பொருள் தடுப்பில் சிறந்து விளங்கியமைக்காக ஒன்றிய அரசின் விருது பெற்ற மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், சமூக பாதுகாப்பு இயக்குநர் அமர் குஷ்வாஹா ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.07.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சி. ஃபெர்னான்டஸ் ரத்தின ராஜா சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சி. விஜயராஜ் குமார், சிறுபான்மையினர் நல மேலாண்மை இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம் ஆகியோர் உள்ளனர்.

## ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் 'தமிழ்நாடு' என்ற சொல்லே கிடையாது! நிதி ஒதுக்கீட்டில் நீதி இல்லை!

# தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் ஒன்றிய அரசின் 'நிதி ஆயோக்' கூட்டத்தைப் புறக்கணிக்கிறேன்'!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 25 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் மாலை, சென்னை - அண்ணா அறிவாலயத்தில் அளித்த பேட்டியில், "ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் 'தமிழ்நாடு' என்ற சொல்லே இடம்பெறவில்லை! நிதி ஒதுக்கீட்டில் நீதி அறவே இல்லை! அநீதிதான் அதிகம் உள்ளது. தமிழ்நாட்டை அறவே புறக்கணித்துள்ள ஒன்றிய அரசு நடத்தும் 'நிதி ஆயோக் கூட்டத்தை நான் புறக்கணிக்கிறேன்!" என்று அறிவித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (23.07.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டதாவது:-

அனைவருக்கும் வணக்கம்.

ஏற்கனவே ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையை ஒட்டி, ஒரு நீண்ட அறிக்கை கொடுத்திருக்கிறேன். அதையொட்டி, நான் ஒரு முக்கிய முடிவினை எடுத்திருக்கிறேன். அதற்காக உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன்.

ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் இன்றைக்குத் தாக்கல் செய்திருக்கின்ற நிதிநிலை அறிக்கை, மிகப்பெரிய ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. மூன்றாவது முறையாக வாக்களித்த மக்களுக்கு இந்த பா.ஜ.க. கூட்டணி அரசு எந்த நன்மையும் செய்யத் தயாராக இல்லை என்பதை இந்த நிதிநிலை அறிக்கை தெளிவாகக் காண்பிக்கிறது.

### இரு தினங்களுக்கு முன்னர் ஒன்றிய அரசுக்கு நான் விடுத்த கோரிக்கை!

நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு என்று என்னென்ன திட்டங்கள் அறிவிக்கவேண்டும் என்று இரண்டு நாட்களுக்கு முன் நான் டிவிட்டரில் வெளியிட்டிருந்தேன். அதை நீங்கள் பார்த்திருப்பீர்கள், நீங்களும் அதனை வெளியிட்டு இருக்கிறீர்கள்.

பல கோரிக்கைகளை அதில் எடுத்து வைத்தேன்; நிதிநிலை அறிக்கையில் இடம்பெற வேண்டும் என்று!

- **மூன்று ஆண்டுகளாக விடுவிக்கப்படாமல் இருக்கும் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கான நிதியை விடுவிக்க வேண்டும் என்றும்**
- **கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான ஒப்புதலை விரைந்து வழங்க வேண்டும் என்றும்**
- **தமிழ்நாட்டில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள ரயில்வே திட்டங்களை விரைந்து செயல்படுத்திட நிதியை ஒதுக்கீடு செய்யுங்கள் என்றும்**
- **தாம்பரம் செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவு சாலைத் திட்டத்துக்கான ஒப்புதலை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் சில கோரிக்கைகளை வைத்திருந்தேன். இதில் எதையும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்த பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை.**

### இரு மாநிலங்களுக்கு மட்டும் எண்ணற்ற திட்டங்கள்!

மைனாரிட்டி பா.ஜ.க.வை, மெஜாரிட்டி பா.ஜ.க.வாக ஆக்கிய ஒரு சில மாநிலக் கட்சிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் ஒரு சில மாநிலங்களுக்கு மட்டும் சில திட்டங்களை அறிவித்துள்ளார்கள். அறிவித்துள்ளார்களே தவிர, அதையும் நிறைவேற்றுவார்களா என்பது என்னைப் பொறுத்தவரைக்கும் சந்தேகம்தான்.

எப்படி, தமிழ்நாட்டுக்கு மெட்ரோ ரயில் என்று அறிவித்து விட்டு, நிதி ஒதுக்காமல் இன்றைக்கு வரையில் ஏமாற்றி வருகிறார்களோ அதுபோல, அந்த மாநிலங்களுக்கும் எதிர்காலத்தில் நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது?

தமிழ்நாடு மிகப்பெரிய இரண்டு இயற்கைப் பேரிடர்களை எதிர்கொண்டது. 37 ஆயிரம் கோடி ரூபாய் வரை இழப்பீடு நாம் கேட்டோம். தொடர்ந்து வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தோம். ஆனால், இதுவரை 276 கோடி ரூபாய்தான் கொடுத்துள்ளார்கள். அது



சட்டப்படி வரவேண்டிய தொகை. இதில் என்ன வேடிக்கை என்னவென்றால், இரண்டு மூத்த ஒன்றிய அமைச்சர்கள் - பாதுகாப்புத் துறை அமைச்சர், நிதியமைச்சர் என்று இருவரும் நேரடியாகப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். இதுதான் தமிழ்நாட்டு மக்களை பா.ஜ.க. மதிக்கின்றதா? என்பதுதான் என்னுடைய கேள்வி.

### ஒன்றிய அரசின் சிந்தனையில் - 'தமிழ்நாடு' அறவே இல்லை!

தமிழ்நாட்டுக்கான எந்தச் சிறப்புத் திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை. நமது கோரிக்கைகள் எதுவுமே இதில் நிறைவேற்றப்பட வில்லை. புதிய ரயில்வே திட்டங்கள் அறிவிக்கப் பட வில்லை. ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியைத் தாங்கிப் பிடிக்கும் மாநிலங்களைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களையும் நிதி அமைச்சர் மறந்தே போய் விட்டார்.

'தமிழ்நாடு' என்ற சொல்லே நிதிநிலை அறிக்கையில் இல்லை என்று சொல்வதைவிட, ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்களின் சிந்தனையிலும், செயலிலும் தமிழ்நாடு இல்லை. பாரபட்சமும் ஏமாற்றமும்தான் இந்த அறிக்கையில் இருக்கிறது.

### நிதிநிலை அறிக்கையில் அநீதியே அதிகம் உள்ளது!

ஒரு நாட்டின் நிதி நிலை அறிக்கை என்பது அந்த நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அந்த வகையில், நிதி ஒதுக்கீட்டில் நீதி இல்லை. அநீதியே அதிகம் உள்ளது.

"அரசியலை தேர்தல் களத்தில் பார்த்துக் கொள்ளலாம். இப்போது நாம் இணைந்து நாட்டிற்காகப் பணியாற்ற வேண்டும்" என்று பிரதமர் அவர்கள் நேற்றுதான் சொல்லியிருக்கிறார். அனைத்துப் பத்திரிகைகளிலும் அது வந்திருக்கிறது. ஆனால், அவர் நேற்று சொன்னதற்கு எதிராக இன்றைக்கு அவருடைய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்காதவர்களுக்கும் நன்மைகள் செய்வதுதான் ஒரு சிறந்த அரசு என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். அப்படிதான் தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளும் இருக்கிறது. இதைப் பார்த்தாவது, ஒன்றிய அரசு தன்னுடைய போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### நிதி ஆயோக்: ஒட்டு மொத்தமாகப் புறக்கணிப்பதே சரியானது!

வருகின்ற 27ஆம் தேதி பிரதமரின் தலைமையில் 'நிதி ஆயோக்' கூட்டம் நடப்பதாக அறிவிக்கப்பட்டி ருக்கிறது. நானும் அதில் பங்கெடுக்கத் திட்டமிட்டு இருந்தேன். அதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தேன். ஆனால், நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் அந்தக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம் என்று நான் முடிவெடுத்திருக்கிறேன். அதைப் புறக்கணிக்கப்போகிறேன்.

தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் ஒன்றிய அரசின் கூட்டத்தை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிப்பதே சரியானது என நினைக்கிறேன்.

தமிழ்நாட்டின் தேவைகளை, உரிமைகளை நிலைநாட்ட மக்கள் மன்றத்தில் தொடர்ந்து நாங்கள் போராடுவோம். நாளைய தினம் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் டெல்லியில் போராட்டம் நடத்தப் போகிறார்கள், அதற்கு நாங்கள் அனுமதியும் வழங்கியிருக்கிறோம்.

**கேள்வி:** 40க்கு 40 வெற்றிதான் தமிழ்நாடுபுறக்கணிக்கப்படுவதற்கான காரணம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** தமிழ்நாட்டு மக்கள் மீது அவ்வளவு ஆத்திரத்தில் இருக்கிறார்கள் அவர்கள்.

**கேள்வி:** தமிழ்நாடு மிகவும் பிடித்திருக்கிறது என்று சொல்லியிருந்தார் பிரதமர், அது பற்றி...

**முதலமைச்சர்:** தமிழ்நாடு என்று மட்டுமா சொன்னார், திருக்குறளும் பிடிக்கும் என்று சொன்னாரே, திருக்குறள் என்று ஒரு வார்த்தைகூட கிடையாது, தமிழ்நாடு என்ற ஒரு வார்த்தைகூட பட்ஜெட்டில் கிடையாது.

**கேள்வி:** பட்ஜெட்டில் நிதி ஒதுக்காத போது, தமிழ்நாட்டில் நிறைய திட்டங்கள் இருக்கின்றன. மெட்ரோ ரயில் போன்ற திட்டங்கள் இருக்கின்றன. தமிழ்நாடு அரசு அவற்றை எப்படிக் கையாளும்?

**முதலமைச்சர்:** இதுவரைக்கும் எப்படி கையாண்டு கொண்டிருக்கிறோமோ, நாங்கள் அப்படியே கையாளுவோம்!

**கேள்வி:** பத்திரப்பதிவுக் கட்டணங்களை மாநில அரசுகளுக்குக் குறைத்திருக்கிறோம் என்று நிதியமைச்சர் சொல்லியிருக்கிறார். அது பற்றி...

**முதலமைச்சர்:** நான்தான் ஒட்டு மொத்தமாகச் சொல்லிவிட்டேனே! தமிழ்நாட்டை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்திருக்கிறார்கள். புறக்கணித்த காரணத்தினால் பிரதமர் கூட்டுகின்ற அனைத்து முதலமைச்சர்கள் கூட்டத்தைப் புறக்கணிக்கப் போகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.



கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி அவர்களை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி 40க்கு 40 இடங்கள் வெற்றி பெற்றதை முன்னிட்டு இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்த 12 ஆயிரம் பகுதி நேர ஆசிரியர்கள் அதன் கூட்டமைப்பு சார்பில் நேற்று (24.07.2024) மாநில ஒருங்கிணைப்பாளர் எஸ்.செந்தில்குமார் தலைமையில் நிர்வாகிகள் தண்டபாணி, சுரேஷ், நாகலட்சுமி, முரளி, ஆனந்தன் உள்ளிட்டோர் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரியாம்பட்டி ஊராட்சியில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர் சக்கரபாணி நேற்று (24.07.2024) திறந்து வைத்தார். அருகில் பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சத்தியபுவனா ராஜேந்திரன் உட்பட பலர் உள்ளனர்.